**தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 02ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பா் 31 இல் உள்ளவாறான அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் கூட்டிக் காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவினங்களுக்காக 21 செலவின விடயங்களின் ரூபா 15,988,107,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகளில் ரூபா 11,995,799,491 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் 28 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டியதன் தேவைப்பாடு. | ரூபா 8,455 மில்லியன் சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டிச் சலுகைகளை செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளக்கு கட்டுநிதி கிடைக்காமையால் இந்த சேமிப்பு இடம்பெற்றுள்ளது என்பதும், ரூபா 3,541 மில்லியன் ஏனைய நிவாரணங்கள் செலுத்துவதற்காக அதற்கு நிலவும் கேள்வியின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், வங்கியுடன் கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் ஆண்டின் இறுதி காலாண்டிற்குரிய வங்கியினால் எமக்கு வழங்கப்படும் சலுகைக் |

| | | | |
|---|---|---|---|
| | | | கோரிக்கைகளுக்காக செலுத்தப்படுவது அதற்கடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் எனவும், எஞ்சிய நிதியேற்பாடுகள் 2019ஆம் ஆண்டிற்கான பொறுப்புகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | 03 மீண்டெழும் செலவினம விடயங்களின் ரூபா 15,000,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | இந்த செலவினம விடயங்களுக்குரிய கடன் முன்மொழிவு மூலம் கடன் ஆண்டின் இறுதிக் காலாண்டிலேயே வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த கோரிக்கைகளை அடிப்படையாக கொண்டு நிவாரணங்க்ள வழங்கப்படுவது அதற்கடுத்த ஆண்டின் முதற் காலாண்டில் எனவும், எஞ்சிய நிதியேற்பாடுகள் 2019ஆம் ஆண்டிற்கான கடப்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு அனுப்பப்பட்டிருந்தது. |
| (இ) | மூலதன செலவினங்களுக்காக 4 செலவின விடயங்களின் ரூபா 1,727,490,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகளில் ரூபா 977,731,556 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் அல்லது 57 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 2019ஆம் ஆண்டின் போது நிதியங்களை வழங்கும் போது அதன் செயற்பாட்டு நடைமுறையில் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்காக செயற்திட்டத்தின் கீழ் நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளதாகவும், அத்வல கடன் உத்தேச முறைமையினுள் ரூபா 215 மில்லியன் மீள வழங்கப்பட்டமையால் எஞ்சிய நிதியேற்பாடு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சிரேஷ்ட பிரஜைகளுக்கான நிலையான வைப்புகளுக்காக வட்டிச் சலுகைகளுக்காக 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய மீதி ரூபா 50,038,492,608 ஆன போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகளாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் இறுதியில் உள்ளபடியான பொறுப்புகள் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்குகளில் வெளிப்படுத்தல் அத்தியாவசியமானது ஆகும். | சிரேஷ்ட பிரஜைகளுக்கான நிலையான வைப்புகளுக்காக வட்டிச் சலுகைகளை செலுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2015ஆம் ஆண்டு முதல் போதியளவான பாதீட்டு நிதியேற்பாடு காணப்படாமை, கட்டுநிதி கிடைக்காமை மற்றும் நிதியேற்பாடுகளை மீள பெற்றுக்கொள்வதன் மூலம் பாதீடு முகாமை செய்யப்படுகின்றமையால் 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய வட்டிச் சலுகையின் பெறுமதியை செலுத்த முடியாதெனவும், அரச செலவினங்களை கணக்குவைக்கும் கட்டமைப்பினுள் அவ்வாறான கணக்கு வைக்கும் முறையொன்றினை பதிவுசெய்ய நடைமுறையொன்று நிறுவப்பட்டிராமையால், அந்த அட்டுறு செலவினத்தை எதிர்பார்த்தவாறு கணக்கு வைக்க முடியாதுள்ளமை தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை

2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம், 2017ஆம் ஆண்டு முதல் அனுமதிப்பத்திரம் பெற்ற வணிக வங்கிகளில் ரூபா 1.5 மில்லியன் அல்லது அதற்கு குறைவாக சிரேஷ்ட பிரஜைகளால் பேணப்படும் நிலையான வைப்புகளுக்காக 15 சதவீத வட்டி செலுத்தப்படுகின்றது. பொதுவான வட்டி வீதம் மற்றும் செலுத்தப்படும் 15 சதவீத வட்டி

ஆகியவற்றுக்கடையிலான வேறுபாட்டுக்குரிய பணம் பொது திறைசேரியால் குறித்த வங்கிகளுக்கு மீளளிப்பு செய்யப்படும். 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக 7 அரச வங்கிகள் மற்றும் 22 தனியார் வங்கிகளுக்கு உரியதாக செலுத்த வேண்டிய மொத்த வட்டிச் சலுகைப் பணம் ரூபா 50,038,492,608 ஆகும். 2019ஆம் ஆண்டின் போது இந்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய தேறிய நிதியேற்பாடு ரூபா 9,697,360,000 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 1,242,324,885 பயன்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய தொகை ரூபா 8,455,035,115 ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | கிடைத்திருந்த நிதியேற்பாடுகளில் எஞ்சிய ரூபா 8,455,035,115 தொகையானது 2019ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வட்டிச் சலுகைகளை செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதிகரித்தவாறு காணப்படும் இந்த பொறுப்புகளை உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்காக துரித நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு. | செலுத்த வேண்டிய இந்த பணத்திற்காக 2020 திசெம்பர் 15ஆந் திகதி ரூபா 59,605,490,495 ஆன திறைசேரி பிணைமுறிகள் வெளியிடப்பட்டதுடன், எஞ்சிய தொகையான ரூபா 2,262,927,825 தொகையானது 2020 திசெம்பர் 18ஆந் திகதி தீர்ப்பனவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம், 2020 திசெம்பர் 18ஆந் திகதி வரையிலும் சிரேஷ்ட பிரஜைகளுக்காக பேணப்படும் நிலையான வைப்புகளுக்காக வணிக வங்கிகளுக்காக 2020ஆம் ஆண்டிற்கான இரண்டாவது காலாண்டு (2020 யூன் 30) வரையிலும் செலுத்த வேண்டிய வட்டிச் சலுகை முழுமையாக வணிக வங்கிகளுக்கு செலுத்தி தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2016 மற்றும் 2017ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் முறையே ரூபா 6,156,498,396 தொகை மற்றும் ரூபா 13,093,646,432 ஆன பொறுப்புகளுக்காக 2019ஆம் ஆண்டின் இறுதிவரை எந்த தெகையையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், ஒட்டுமொத்த அங்கீகரித்த பதவியணி 45 ஆகும். சிரேஷ்ட மட்டத்திலான 18 பதவிகள் நிலவியதுடன், அவற்றுள் ஒரு பதவி வெற்றிடமாக காணப்பட்டது. | அந்த வெற்றிடங்கள் நிலவுதல் செயலாற்றலுக்கு பாதகமான முறையில் தாக்கம் செலுத்துமாயின் அவற்றை நிரப்புவதற்கும், அவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தாதெனின், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்குமான தேவைப்பாடு. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |